விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 170 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 24 சனிக்கிழமை (07.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## ஈ.பி.டி.பியுடன் பேச்சுவார்த்தை தனக்கு எதுவும் தெரியாது



### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஈ.பி.டி.பியுடன் தமிழரசுக் கட்சி நடத்திய பேச்சு வார்த்தை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி. கே.சிவஞானம் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழி நீதியான விசாரணை!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெறும். அரசு இதற்கு முழுமையாக ஒத்துழைக்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி சித்துப்பாத்தி மயானம்

# மனித புதைகுழியாக நீதிமன்றால் பிரகடனம்

### 45 தினங்கள் அகழ்வுப் பணியை முன்னெடுக்கவும் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை செம்மணி சித்துபாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியை குற்றவியல் சம்பவம் நடந்த மனித புதைகுழி எனத் தெரிவித்த யாழ்.நீதவான் நீதிமன்றம் தொடர்ச்சியாக 45 தினங்களுக்கு அகழ்வாய்வுப் பணிகளை முன்னெடுக்க உத்தரவிட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)



## மல்லாவியில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மல்லாவியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் மல்லாவி அனிச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ரி.எம். கேரத் பண்டா (வயது-38) என்பவரே உயிரிழந்தவராவார்.

மல்லாவியில் கடந்த 23ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் துவிச்சக்கர 15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசியம் பற்றி வகுப்பெடுக்க வேண்டாம்

### சி.வி.கே.சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியம் பற்றி எமக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை எனத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்புத் 02ஆம் பக்கம் பார்க்க

## சாராயக் கம்பனிகளிடமிருந்து பணம் பெறுவோர் நிதியமைச்சில்

### சில தினத்தில் வெளிப்படுத்துவேன் – அமைச்சர் சுனில்

(கொழும்பு)

சாராயக் கம்பனிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் ஓரிரு நபர்கள் நிதி அமைச்சில் இருக்கின்றனர். அவர்களின் பெயர் விபரங்களை ஒரு சில தினங்களில் வெளிப்படுத்துவேன் என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், நளின் பண்டார மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகி 14ஆம் பக்கம் பார்க்க

## பட்டா - மோ.சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

### குடும்பஸ்தர் பலி; சங்கானையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிள்ளையார் ஆலய வளைவு வீதியில் பட்டா ரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

### ஆட்சியமைப்பது தொடர்பில்

## ஒளிவு மறைவு இல்லாமல் பேச்சை முன்னெடுக்கின்றோம்

### ஈ.பி.டி.பியுடனான கலந்துரையாடல் தொடர்பில் சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)

நாங்கள் ஆட்சியமைப்பது தொடர்பில் ஏனைய தமிழ்க் கட்சிகளிடம் ஆதரவு கோரிக்கையை எந்தவித ஒளிவு மறைவு இல்லாமல் நேரடியாக மேற்கொண்டிருக்கிறோம் 14ஆம் பக்கம் பார்க்க

## கிராமிய அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்துக

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதி 14ஆம் பக்கம் பார்க்க

### கொள்கைரீதியான ஒப்பந்தத்தை ஏற்று

## இலங்கைத் தமிழரசுக் கட்சி எமது கூட்டில் இணைய வேண்டும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு


(யாழ்ப்பாணம்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் தமிழ்த் தேசிய பேரவைக்குமிடையில் கொள்கைரீதியில் கைச் சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்று தமிழரசுக் கட்சியும் இந்த கூட்டில் இணைய வேண்டும் என்ற அழைப்பை மீண்டும் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 07 . 10 . 1935

உதிர்வு 06 . 05 . 2025

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து கடந்த 06.05.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த கந்தரோடை மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சின்னத்தம்பி தர்மலிங்கம்

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)**

இன்று 07.06.2025 சனிக்கிழமை நடைபெறவுள்ள அவர்களின்ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குல விளக்கின் மறைவுச் செய்தி அறிந்து இல்லம் நாடி வந்து ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் நேரில் வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தோருக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.** (4484)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்

# காணி விற்பனைக்கு

புத்தூர் சுன்னாகம் காபட் பிரதான வீதியில் காணிகள் விற்பனைக்கு உண்டு.

**50 பரப்பு**
**53 பரப்பு**
**25 பரப்பு**
**10 பரப்பு**

கல்லுடைக்கும் ஆலை கடைத் தொகுதி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு : (4478)

**077 625 1447**

# பணியாளர் தேவை

விடத்தல்பளை, கச்சாய் வீதியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அக்ரோ நிறுவனத்தில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பண்ணையில் வேலை செய்த அனுபவமுள்ள பணியாளர் தேவை. (C-3132)

**077 076 7114**

# தமிழ்...

தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் நாம் ஈபிடியிடம் ஆதரவு தரத்தான் சொல்லியிருந்தோம் இணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடவில்லை நாம் அனைத்தையும் வெளிப்படையாக மக்கள் முன்னிலையிலேயே செய்கின்றோம்.

அத்தோடு, ஒற்றையாட்சியை தாம் ஒரு காலத்திலும் ஏற்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். (ம-7)

# தேவை

வீசா ஆலோசனை நிறுவனத்துக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- ♦ முகாமைத்துவ உதவியாளர் (Office admin)
- ♦ Air ticketing Executive

பெண் ஊழியர்கள் மட்டும். EPF, ETF வழங்கப்படும்.

**Arunwings Travels Tours Pvt LTD**
**T.P : 076 847 2458** (4485)

# வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு

- ♦ ஐஸ்கிறீம், கேக் தயாரிப்பவர்கள்
- ♦ உணவு பரிமாறுபவர்கள் (waiters)
- ♦ சமையல் உதவியாளர்
- ♦ துப்புரவுப் பணியாளர்கள்
- ♦ பூங்கன்று பராமரிப்பாளர்கள்

தேவை.


ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள் (C-3134)

தொடர்பு : **077 729 2840**

# மரண அறிவித்தல்

## நாராயணன் விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியரும், யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும்)



தும்பளை தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, நவாலி தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாராயணன் விஸ்வலிங்கம் அவர்கள் நேற்று 06.06.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரன் - ஆசைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் லலிதாதேவி (ஓய்வுநிலை அதிபர் வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, முன்னாள் யாழ். தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளர்) அவர்களின் அன்பு கணவரும் Dr.தனேஸ்குமார்(மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு), கோமகள்(ஆசிரியர், நெளுக்குளம் கலைமகள் ம.வி - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜேந்திரன்(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை - வவுனியா) அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், லிகிதபதி, பூபதி, அன்னலட்சுமி மற்றும் சத்தியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னபூரணம், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், சோமசுந்தரம், சிவஞானசேகரம் மற்றும் விஜயதேவி, விமலாதேவி (வைத்தியர்), சரோஜினிதேவி(ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ரஞ்சினிதேவி, தவராஜசேகரம் (ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் கேசவ், பிரணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.06.2025 நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077 669 0515, 077 704 7513 (4479)

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 31 . 10 . 1992

இறப்பு 23 . 05 . 2021

அமரர்

## திருமதி தர்ஷியா சுஜீவன்

நிஜம் இன்றி நிழலில்லை – என்பது
பொய்த்துவிடும் படியாய் – உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்

விநாயகர் வீதி,
நல்லூர். (4481)

அழிக்கமுடியாத நினைவுகளுடன்,
கணவன், பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடிக் கும்பலிடமிருந்து மீனவ மக்களை காப்பாற்றுங்கள்

## ரவிகரன் எம்.பி வலிறுயுத்து



(கொழும்பு)

**வடமாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்திலும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தீவிரம் பெற்றிருப்பதை சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறாக சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் திருட்டுக்கும்பலின் கொட்டத்தை அடக்கி மீனவமக்களை காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை ஒன்றினை முன்மொழிந்தார். இந்நிலையில் குறித்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையில் பங்கேற்று கருத்துத்தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யுமாறு கடற்றொழில் அமைச்சருக்கு ஏற்கனவே தாம் எழுத்துமூலம் கோரிக்கை முன்வைத்தும், அதுதொடர்பில் இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மீனவர்களின் வாழ்வாதாரங்கள் மற்றும், கடல்வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமான கடற்றொழில் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் செயல்கள் கடுமையாக இல்லை. கடற்றொழில் அமைச்சரும் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தும், இதுவரை நிலைமைகள் சீராகவில்லை.

மீனவ மக்களோ மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மீனவக்குடும்பங்கள் தமது பிள்ளைகளின் கல்விச்செயற்பாடு உட்பட, தமது அன்றாட வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல முடியாமல் திண்டாடுகின்றனர்.

சட்டவிரோதிகள் ஏதேனும் செல்வாக்குகளைப் பயன்படுத்தித்தான் இவ்வாறான அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனரோ என்ற ஐயப்பாடு மீனவமக்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஏன்எனில் அந்த அளவிற்கு சட்டவிரோத கடற்றொழிலாளர்களால் கடல்வளம் சூறையாடப்படுகின்றது.

இந்நிலையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நாமாவது கட்டுப்படுத்துவோம் என்னும் நோக்கில் முல்லைத்தீவு கள்ளப்பாடுப் பகுதியிலிருந்து மீனவமக்கள் தாமாக ஒன்றிணைந்து, சட்ட விரோத கடற்றொழில் செயற் பாட்டில் ஈடுபடுபவர்களின் ஆறு படகுகளைப் பிடித்திருந்தனர். அதன் பின்புதான் கடற்றொழில் திணைக்களமும் இதில் இணைந்துகொண்டது. அதன் பின்னர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேவேளை தாமாக இணைந்து இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கூடாது. கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களமும், கடற்படையும் இணைந்துதான் நடவடிக்கை மேற்கொள்ளமுடியுமெனவும் இதன்போது மீனவ மக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தஅறிவுறுத்தலை ஏற்றுக் கொள்கின்றோம். இருப்பினும் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களமும் தமது ஆளணிப்பற்றாக்குறையை தொடர்ந்து எம்மிடம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் நானும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் காணப்படும் ஆளணிப்பற்றாக்குறையை எழுத்துமூலமாக கடற்றொழில் அமைச்சரிடம் கையளித்துள்ளேன். இதுவரை அந்த ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய சூழலில் மீனவ சமூகம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்திரமல்ல கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் மற்றும், கிழக்கு மாகாணத்திலும் சட்டவிரோதிகளால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. எனவே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடும் திருட்டுக்கும்பல் களின் கொட்டத்தை அடக்கி, சட்டவிரோதிகளிடமிருந்து எமது மீனவ மக்களைக் காப்பாற்றுங்கள் என அவர் தெரிவித்தார்.(நி-8-299)

---

### இதற்குத் தானே ஆசைப்பட்டாய்...

## 10 ரூபாய்க்காக 5 லட்சம் அபராதம் செலுத்திய வர்த்தகர்

(கொழும்பு)

இரத்தினபுரி - கலவானை பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு நீதிமன்றம் 500,000 ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

70 ரூபாய் விலையை கொண்ட 500 மில்லிலீற்றர் குடிநீர் போத்தலை 80 ரூபாய்க்கு விற்றதற்காக கலவானை நீதிவான் நீதிமன்றம் இந்த அபராதத்தை விதித்துள்ளது.

பல்பொருள் அங்காடி நிர்வாகம் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் கொழும்பு தாமரைக் கோபுரத்தின் தரை தளத்தில் உள்ள கடை உரிமையாளருக்கு, அதிக விலைக்கு குடிநீர் போத்தலை விற்றதற்காக கொழும்பு மேலதிக நீதவான் 100,000 ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசாரணைப் பிரிவு நடத்திய சோதனையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர், விதிமுறைகளை மீறி 80 ரூபாயான 500 மில்லிலீற்றர் குடிநீர் போத்தலை 150 ரூபாய்க்கு விற்றதாக அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இதேவேளை, இதுபோன்ற அதிக விலை நிர்ணய சம்ப வங்கள் குறித்து முறையிடுமாறு நுகர்வோர் விவகார ஆணை யகம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது. (நி-8)

---

## மேலும் 4 லட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும உதவித்தொகை

(கொழும்பு)

அடுத்த மாதம் மேலும் 400,000 குடும்பங்களுக்கு அஸ்வெசும உதவித் தொகை வழங்கப்படும் எனக் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உதவித் தொகை திட்டத்திற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

---



உலக சுற்றுச் சூழல் தின நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் "பிளாஸ்ரிக் மாசுபாட்டை இல்லாதொழிப்போம்" என்ற கருப்பொருளுக்கு அமைவாக கல்லூரி அதிபர் சுமதி கந்தசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டிருந்தார்.

---

## ஞானச்சுடர் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆன்மிக இதழான ஞானச்சுடர் 329 ஆவது மலர் வெளிவந்துள்ளது.

இம் மலரில் அசலாக நாம் வாழ, நம்பிக்கை ஊட்டும்,திருக்கயிலாயம்.... போன்ற பல ஆன்மிக தகவல்களை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. (நி-3-8)

---

## கௌரவிப்பு நிகழ்வு

(நெளுக்குளம்)


முல்லைத்தீவு செம்மலை கிராமத்தில் நிலவுகின்ற அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பான தேவை பகுப்பாய்வு கலந்துரையாடல், கிராமத்தில் கல்வியில் சாதித்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் பிரதேச செயலாளர் மஞ்சுளா தேவி மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். கடந்த வருடம் உயர்தர பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, புலமை பரிசில் பரீட்சை உள்ளிட்டவற்றில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதுடன் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

செம்மலை கிராமத்தின் விவசாய பிரதேசமான புளிய முனை பகுதியில் காட்டு யானைகளின் தொல்லையின் காரணமாக பல ஏக்கர் விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படாமல் உள்ளமை தொடர்பாக வும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், யானை வேலி அமைப்பது தொடர்பான கள ஆய்வும் இடம்பெற்றது.

இதில் வனவளத் திணைக்களத்தினர் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு மர நடுகை நிகழ்வும் இடம் பெற்றது.(8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவலைகள்



மலர்வு 04 - 11 - 1942

உதிர்வு 08 - 05 - 2025

கடந்த 08.05.2025 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சுப்பையா சரவணமுத்து

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வருமானவரி உத்தியோகத்தர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 05.06.2025 வியாழக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 07.06.2025 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"நீலகிரி"
கல்வயல், சாவகச்சேரி

(C-3135)

உங்கள் நினைவுகளுடன்:-
குடும்பத்தினர்


## வீடு விற்பனைக்கு

யாழ்.மல்லாகம் பகுதியில் 2 ½ பரப்பு காணியில் பயன் தரும் மரங்களுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.

(4487)

தொடர்புகளுக்கு
**075 777 5693**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**


## விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இருபாலை - C.C தமிழ்கலவன் பாடசாலைக்கு அருகில் 8 பரப்புக் காணியும் பாடசாலையை அண்மித்த பகுதியில் 12 பரப்புக்காணியும் கோப்பாய் தெற்கு - முனிகோயிலடியில் 6.4 பரப்பளவு, கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் கோயிலை அண்மித்த பகுதியில் 12 பரப்பும் உடனடி விற்பனைக்குண்டு.

○ தரகர் தேவையில்லை

(4486)

**076 940 1045/076 159 8003**

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் தலைவரும் ஓய்வுநிலை பிரதேச சபை செயலருமான

## திரு.தி.தியாகச்சந்திரன்

அவர்களுக்கு எமது


Best Wishes!

மணிவிழா வாழ்த்து

(1204)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரும் முன்பள்ளி ஆசிரியர்களும்

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 - 02 - 1942

மறைவு 05 - 06 - 2025

## கணபதி பழனிப்பிள்ளை

இருபாலை கிழக்கு கேணிக்குளம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட கணபதி பழனிப்பிள்ளை கடந்த (05.06.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் தங்கம் அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதி - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம், கற்பகம், அரியநாயகம், பூபதிதாசன், சிவசோதி மற்றும் சிதம்பரம், காசிநாதன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் பாசமிகு மைத்துனரும் செந்தில்குமரன், தயாளினி, செந்தில்நாதன், கிருபாளினி, செந்தில்ரூபன், செந்தில்லபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி, இராஜரட்ணம், காயத்திரி, தயாபரன், றஜீவி, டிலக்ஷி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.06.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 175 8457

(C-3136)

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 23 - 05 - 1935

அம்பாள் அடியில் 03 - 06 - 2025

## கந்தசாமி தவமலர்

நாவலடி அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தவமலர் அவர்கள் (03.06.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் இளைய புத்திரியும் காலஞ்சென்ற கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கந்தையா கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் உதயசிங் (நோர்வே), உதயராணி (கொழும்பு), யோகராணி (லண்டன்), உதயராஜ் (டென்மார்க்), உதயஸ்ரீசிங் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜானகி (நோர்வே), மணீஸ்வரன் (கொழும்பு), சுகராஜா (லண்டன்), வினோதாராணி (டென்மார்க்), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசத்திற்குரிய மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று பின்னர் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
அல்வாய் வடக்கு.

(C-3137)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை சந்தேக நபர் தப்பியோட்டம்

(நெளுக்குளம்)


முல்லைத்தீவு பரிசங்குளம் குருவிச்சையாறு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த நிலையில் 135000 மில்லிலீற்றர் கோடா, செப்பு சுருள், பரல் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி சுபேசன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் மாலை பரிசங்குளம் குருவிச்சையாறு பகுதியில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் உற்பத்திக்கு தயாராக இருந்த நிலையில் 135000 மில்லிலீற்றர் கோடா, செப்பு சுருள், பரல் என்பன ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட நிலையில் முள்ளியவளை பகுதியை சேர்ந்த சந்தேக நபர் தப்பியோடியுள்ளார்.

குறித்த சந்தேக நபரினை தேடி வருவதாகவும் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-299)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 . 09 . 1944



ஆண்டவன் அடியில் 11 . 06 . 2022

### அமரர் கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு

(முன்னாள் யாழ்.ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்)

எம் வாழ்க்கையின் தெய்வம்-அப்பா
எம் வெற்றியின் இரகசியம்-அப்பா
தம்மை வருத்தி எம்மை
தன்னம்பிக்கையோடு வாழ வைத்தவர்-அப்பா

அறிவொளி ஊட்டி
அகிலம் சிறக்க வைத்தவர்-அப்பா
உம் நினைவால் வாடுகிறோம்-என்றும்
உலகத்தில் தவிக்கின்றோம்-அப்பா
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

என்றும் உங்கள் நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமகன்
பேரன்: கியாஸ், றியான்

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(c-3129)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 16 . 11 . 1947

உதிர்வு 08 . 05 . 2025

அமரர்
### மதியாபரணம் தங்கரத்தினம்
(பவுண்)

எங்கள் குடும்பத்தின் எழிலாள் பவுண்
தங்க ரத்தினம் தரணி விட்டேகியே
முப்பத்தொரு நாட்கள் முடிந்தது முழுமையாய்
எப்போது இனிக்காண்போம் ஏதுமறியா நிலை!

மதியாபரணம் என்னும் மன்னவன் உனையழைத்தான்
மனைவியாய் என்றும் மகத்துவம் காத்தவளே!
மக்கள் மருமக்கள் மனங்கலங்கி தவித்திருக்க
மகிழ்வோடு போயினையோ மன்னவன் மனதினிக்க!

07.06.2025 இன்று கீரிமலையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று 13.06.2025 அன்று இல்லத்தில் மதிய போசன வைபவம் நிகழும்.

தங்கமகால்,
நெல்லியடி வடக்கு,
வதிரி, கரவெட்டி.

(C-3130)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்


# இராசிபலன்

07.06.2025
வைகாசி 24, சனிக்கிழமை
ஏகாதசி காலை 6.32 மணிவரை

சித்திரை முற்பகல் 11.23 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
ஏகாதசி விரதம், ஹஜ் பெருநாள்.

சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்திரட்டாதி

**வளவன்**

**மேஷம்**
நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்**
பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கடகம்**
பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி**
குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு, வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் கூடும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.

**துலாம்**
சுப செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும், பயணங்கள் கைகூடும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**
பயணங்களால் பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு**
நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சிய பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், குடும்ப சுகம் கூடும்.

**மகரம்**
செயற்பாடுகளில் தீவிரம் கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரும், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


**கும்பம்**
ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செலவில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**
திடீர்ச் செலவுகளால் சேமிப்பில் சிறிது கரையலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**அகந்தை என்பது அடித்தளம் இல்லாத கட்டடம் போன்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம்ஹிய்யா கொடுப்போம் ஹஜ்ஜு பெருநாளை கொண்டாடுவோம்




கலாபூஷணம் பரீட் இக்பால் - யாழ்ப்பாணம்

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதிபடைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம்வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேச அளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம் மத்தின் ஐக்கியமும் ஒருமைப் பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.



நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ் வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்று கூடும் வியாபாரச் சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப் பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக "இல்லையே தமக்கொரு பிள்ளை" என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாகவும் முன் மாதிரியானதாகவும் அமைய வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. முஸ்லிம்கள் இந்த நாட்டில் தனியாக வாழ்பவர்கள் அல்லர். நாம் பெரும்பான்மை சமூகங்களுடன் இரண்டறக் கலந்தே வாழ்கிறோம். எனவே அவர்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும். அவர்கள் ஆவேசப்படுகின்ற, ஆத்திரப்படுகின்ற சூழ்நிலைகளை நாம் உருவாக்கக் கூடாது. ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்றுமத இனங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எந்தத் தவறுமில்லை.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோஷத்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுப்போம் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை மன்ற அறக்கட்டளை ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மன வளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுபட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுபட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் வா. வள்ளி வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 0212 222772, 076 8571395. (நி-3-8)

## அலங்கார உற்சவ நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன் கிழமை வரை 30 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் உற்சவ தினங்களில் தெய்வீக பேருரைகளை செந்நாப்புலவர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆற்றிவருகின்றார். பேருரைகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கான சரியான விடைகளை வழங்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் பரிசளிக்கப்படுகின்றதென தர்மகர்த்தா திருமதி விஜயமாலினி ஆனந்த நடேசன் தெரிவித்துள்ளார். (நி-3-8)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரி லிகோரியார் ஆலயத்தில் இருந்து உதயசூரியன் கிராமம் வரையான கடற்கரைப் பகுதியில் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 280 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 600 |
| தக்காளி | 700 | 750 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 240 |
| கோவா | 500 | 500 | 500 | 500 |
| கரட் | 800 | 750 | 600 | 800 |
| பூசணி | 120 | 160 | 160 | 200 |
| புடோல் | 350 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 150 | 150 |
| பாகற்காய் | 600 | 800 | 700 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 300 |
| லீக்ஸ் | 350 | 450 | 450 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 1000 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 2000 |
| போஞ்சி | 400 | 600 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 350 | 360 |
| கீரை – 1 பிடி | 100 | 100-150 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 180-220 |
| இராசவள்ளி | 700 | 700 | 600 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | 800 |
| முள்ளங்கி | 250 | 200 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 150 | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 |
| சாப்பலா | -- | -- | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய சட்ட ஆவணங்களான காலம் கடந்த பிறப்பு , இறப்பு, விவாக பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் முதியோர் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றிற்கான நடமாடும் சேவை இவ்வாறு நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

குறித்த நடமாடும் சேவையில் 57 கோவைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் குறித்த நிகழ்வில் வைத்து 14 பிறப்பு சான்றிதழும், இரண்டு இறப்பு சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டதுடன், ஒரு விவாகப் பதிவும் இடம்பெற்று விவாக சான்றிதழும், முதியோர் அடையாள அட்டைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (8)

# அதிபர் நியமனம்



(வவுனியா)

வவுனியாவில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அதிபர் வெற்றிடம் காணப்பட்ட சூழ்நிலையில் புதிய அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய திருமதி.ரட்ணாதேவி ரமேஸ் ஓய்வு பெற்ற போது திருமதி இந்துமதி குணரூபன் தற்காலிகமாக அதிபராக கடமையாற்றி வந்தார்.

இந்த சூழ்நிலையில் பாடசாலையில் காணப்பட்ட அதிபர் வெற்றிடத்திற்கு தற்போது திருமதி.சத்தியாதேவி நந்தசேன புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (8)


## கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு (வ/து) கோயில்குடியிருப்பு, முல்லைத்தீவு மாவட்டம்

## பதிவு இலக்கம் Regd No:- Va 262 of 28.01.1971

## நவீன அரிசியாலையை குத்தகை அடிப்படையில் வழங்கல்.

எமது சங்கத்திற்கு சொந்தமான குமுழமுனை மத்தி, முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள அரிசியாலை தொழிற்சாலையும், அதனுடன் இணைந்த ஒரு நெற்களஞ்சிய கட்டடம் ஆகிய சொத்துக்களை மூன்று வருடகாலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகளின் அடிப்படையின்கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. குத்தகை முற்பணமாக ஆகக்குறைந்த தொகையாக ரூபா பத்து இலட்சம் (1 மில்லியன்) எதிர்பார்க்கப்படுகின்றது.
02. மாத குத்தகைப்பணமாக ஆகக்குறைந்த தொகையாக ரூபா ஒரு இலட்சம் (ரூபா 100000.00) எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்திற்கு மாதாந்த குத்தகைப்பணம் செலுத்தப்படல் வேண்டும்.
03. குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் வேறு நபர்களிற்கோ அல்லது நிறுவனங்களிற்கோ உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கைமாற்றமுடியாது.
04. குத்தகை ஒப்பந்தம் மற்றும் முடிவுறுத்தல் தொடர்பிலும் அரிசியாலை, தொழிற்சாலை, களஞ்சியம் தொடர்பான திருத்தம் பராமரிப்பு ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தெளிவான எழுத்து மூலமான ஒப்பந்தம் ஒன்று இரு தரப்பாலும் கைச்சாத்திடப்படும்.
05. அரிசியாலையை வாடகைக்கு பெற்றுக்கொள்பவர் சங்கத்தின் அனுமதியின்றி காணி, கட்டடத்தில் மேலதிக வேலைத்திடங்களாக நிரந்தர இணைப்புக்கள் எதனையும் செய்ய முடியாது எனவும் அவ்வாறு செய்யின் சங்கத்தின் எழுத்துமூல அனுமதியுடன் மட்டும் செய்ய வேண்டும்.
06. அரிசியாலையை வாடகைக்குப் பெற்றுக் கொள்பவர் அங்குள்ள தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் என்பவற்றை பொறுப்பேற்கும் போது பட்டியலிட்டு பெற்றுக்கொள்வதுடன் ஒப்பந்தகாலம் முடிவடைந்தாலும் அதே பொருட்களை இயங்கும் நிலையில் மீளக்கையளிப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
07. ஒப்பந்த காலத்தில் அரிசியாலை வளாகத்தில் சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் அல்லது சமூகவிரோத செயற்பாடுகள் இல்லாத வகையில் செயற்படுத்தப்படல் வேண்டும்.
08. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவ பணியாளர்களின் பொருளாதார நலவுருத்துக்கள் பாதிக்கப்படாத வகையிலும் கிடைக்கப்பெறுவதை உயர்வான மட்டத்தில் பேணப்படுவதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும் 23.06.2025 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்படி விடயம் தொடர்பில் கரைதுரைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின் தீர்மானங்களே அறுதியானதும், முடிவானதுமாகும்.

குறிப்பு:- குறித்த தொழிற்சாலையை நேரடியாக சென்று பார்வையிட விரும்பின் அலுவலக நேரம் 8.30 - 4.30 வரை பார்வையிடலாம் மேலதிக தகவல்களிற்கு தலைவர் அல்லது பொதுமுகாமையாளருடன் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

வருடம் தோறும் இருதரப்பினர் சம்மதத்துடன் ஒப்பந்தம் புதுப்பிக்கலாம்.

தொலைபேசி இல:-024 324 3483

**திரு.க.ஜெயசிங்கம், தலைவர்,**
**கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**முல்லைத்தீவு.**

(சி-3131)


## விசேட அறிவித்தல்



**அமுதசுரபி அம்பிகை**
"அமலனுக்கு அமுதளித்த ஆதிநாயகி அன்பர்களுக்கு உணவளிக்கும் அன்னபூரணி"

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 66 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள், உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்துக்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையினரின் மனமுவர்ந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## திருவிழா விபரம் 2025

| | | | |
|---|---|---|---|
| 26.06.2025 | ஆனி 12 | வியாழன் | கொடியேற்றம் |
| 05.07.2025 | ஆனி 21 | சனி | மஞ்சத் திருவிழா |
| 06.07.2025 | ஆனி 22 | ஞாயிறு | தண்டிகைத் திருவிழா |
| 08.07.2025 | ஆனி 24 | செவ்வாய் | சப்பறத்திருவிழா |
| 09.07.2025 | ஆனி 25 | புதன் | தேர்த்திருவிழா |
| 10.07.2025 | ஆனி 26 | வியாழன் | தீர்த்தத்திருவிழா |
| 11.07.2025 | ஆனி 27 | வெள்ளி | பூங்காவனத் திருவிழா |

நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாட்களும் இரவும், பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நேரடியாகப் பணம், பொருள் கொடுக்க விரும்பும் அடியார்கள் யாழ்.மார்க்கட் சிவகுமார் வெற்றிலைக் கடையிலும் திருநெல்வேலி மார்க்கட் தேனு களஞ்சியத்திலும் கொடுத்து அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர்
AMUTHASURBHI COMMERCIAL BANK
கணக்கு இல: 12479850001 Peoples Bank கட்டடம், Pettah
என்னும் விலாசத்திற்கு இலங்கை வங்கி Kayts
A/C NO: 7687836 என்னும் விலாசத்துக்கும் அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்

| | | |
|---|---|---|
| த.சிவானந்தன் - தலைவர் ஸ்ரீ துர்க்கா என்ரபிறைசஸ் 133.5 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு -11. தொலைபேசி -2384757 | இரா.கடம்பன் செயலாளர் 2 ஆம் வட்டாரம், நயினாதீவு தொலைபேசி:- 021 431 2149 | குமாரசாமி ஸ்ரீ காந்தராசா- பொருளாளர். "மக்மிலன்" புத்தகசாலை. 195, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -11. தொலைபேசி: 244 9565 |

(சி-3128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்கா-சீனா இடையே மீண்டும் வர்த்தகப் பேச்சுவார்த்தை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலக நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரி விதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டார். அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிராக சீனாவும் நடவடிக்கை மேற்கொண்டது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. சீனாவைத் தவிர மற்ற நாடுகளுக்கு விதிக்கப்பட்ட வரியை ட்ரம்ப் நிறுத்தி வைத்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உடன் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் மேலும், இரு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் வர்த்தக பேச்சுவார்த்தை தொடங்கும் எனத் தெரிவித்துள்ளார்.


ட்ரம்ப் 2ஆவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்றபின் ஜி ஜின்பிங் உடன் முதன் முறையாக பேசியுள்ளார்.

இதன்போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், டொனால்ட் ட்ரம்ப் தங்கள் நாட்டிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

அதேபோல் டொனால்ட் ட்ரம்பும், ஜி ஜின்பிங் ஐ அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

சீனாவிற்கு எதிராக அமெரிக்கா எடுத்துள்ள எதிர்மறையான நடவடிக்கைகளைத் திரும்பப் பெற ட்ரம்பிடம் ஜி ஜின்பிங் கேட்டுக் கொண்டதாக சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. (நி-8)

## சௌாப் பாலத்தை திறந்து வைத்தார் மோடி



(டில்லி)

இந்தியாவின் உட்கட்டமைப்பு பயணத்தில் ஒரு வரலாற்று மைல் கல்லைக் குறிக்கும் வகையில், உலகின் மிக உயரமான ரயில் பாலமான செனாப் ரயில் பாலத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

ஜம்பு-காஷ்மீர், உதம் பூரில் உள்ள விமானப் படை நிலையத்தில் தரையிறங்கிய பின்னர், பிரதமர் மோடி செனாப் பாலம் தளத்திற்கு விமானத்தில் சென்று அந்த ரயில் பாலத்தை முறையாகத் திறந்து வைத்தார்.

ஏப்ரல் மாதம் 26 உயிர்களைக் கொன்ற பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக எல்லையைத் தாண்டி நடத்தப்பட்ட "ஆப்ரேஷன் சிந்தூர்" என்ற இராணுவத் தாக்குதலுக்குப் பின்னர், ஜம்மு - காஷ்மீருக்கான அவரது முதல் பயணத்தை இது குறிக்கிறது. (நி)

# 3000இற்கும் மேற்பட்ட

# நடுக்கடலில் எரியும்

★★★

(வோஷிங்டன்)

**அலாஸ்காவின் அலூடியன் தீவுகளுக்கு அருகில் 3,000இற்கும் மேற்பட்ட வாகனங்களை ஏற்றிச் சென்ற சரக்குக் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை தீ விபத்துக்குள்ளானது.**

★★★



இதனால், அதிலிருந்த 22 பணியாளர்கள் கப்பலை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கப்பலில் ஏற்பட்ட தீயானது இன்னும் புகைந்து கொண்டிருப்பதாக அமெரிக்க கடலோர காவல் படை மற்றும் கப்பல் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

600 அடி உயரமுள்ள மார்னிங் மிடாஸ் என்ற கப்பலில் இருந்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

அவர்கள் ஒரு உயிர்காக்கும் படகில்

## இஸ்ரேல் பிரதமருக்கு பிடியாணை பிறப்பித்தவர்களுக்கு தடைவிதித்த அமெரிக்கா



(ஜெருசலேம்)

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்த நீதிபதி உட்பட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகளிற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் தடைகளை விதித்துள்ளது.

நால்வரில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினரின் நடவடிக்கைகளை இலக்கு வைத்து செயற்பட்ட நீதிபதியொருவரும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.


சரவதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதிகளான இந்த நால்வரும் அமெரிக்காவையும் அதன் நெருங்கிய சகாவான இஸ்ரேலையும் இலக்குவைத்து ஐசிசியின் சட்ட

விரோ
கைகள்
அமெரி
மார்க்
துள்ளா
ஈர்
அரசிய
என
நடர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்ட வாகனங்களுடன்
# யும் சரக்குக் கப்பல்!



வித்தனர்.
மார்னிங்
இருந்த
ல்லை.
தும் படகில்

ஏறி. அடாக் தீவிலிருந்து தென்மேற்கே சுமார் 300 மைல்கள் தொலைவிலும், ஆங்கரேஜ்க்கு மேற்கே 1,200 மைல்கள் தொலைவிலும் உள்ள கிரேக்க வணிகக் கப்பலான காஸ்கோ ஹெல்லாஸால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க கடலோர காவல்படை புகைப்படங்கள் மற்றும் கப்பலின் மேலாண்மை நிறுவனமான சோடியாக் மேரிடைமின் அறிக்கை, மின்சார வாகனங்கள் நிரப்பப்பட்ட தளத்திலிருந்து கப்பலின் பின்புறத்தில் ஒரு பெரிய புகை மூட்டம் ஆரம்பத்தில் காணப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது.

ஆரம்பத்தில் கப்பலின் தீயை அணைக்கும் அமைப்பைக் கொண்டு அவசரகால தீயணைப்பு நடைமுறைகளை குழுவினர் தொடங்கியிருந்தாலும், அவர்களால் தீயை கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.

தீப்பரவலின் உறுதியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

இப்போது கப்பலை எவ்வாறு மீட்பது மற்றும் அதை என்ன செய்வது என்பதைக் கண்டுபிடிக்க கடலோர காவல்படை சோடியாக் மேரிடைமுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. (நி-8)

# பாகிஸ்தானில்
## வறுமைக் கோட்டுக்குக்கீழ்
# 10 கோடி பேர்
## உலக வங்கி அறிக்கை



(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் வறுமைக் கோட்டுக்கு கீழ் 44.7 சதவீதம் பேர் வசிப்பதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலக அளவில் உயர்ந்து வரும் விலை வாசி மற்றும் புதிதாக திரட்டியுள்ள தரவுகளின் படி வழக்கமான உலகளாவிய திருத்த பகுதியாக, உலக வங்கி அதன் சர்வதேச வறுமைக்கோடு தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

உலகளாவிய சூழலில் பாகிஸ்தானின் வறுமை நிலைகளை தெளிவுப்படுத்துவது ஒருபுறம் இருந்தாலும், பாகிஸ்தானியர்களின் வறுமைப் பாதிப்பைக் குறைப்பதற்கும், மீண்டு வருவதற்கான யோசனைகளின் முயற்சிகளும் தொடரும் என உலக வங்கியின் பாகிஸ்தான் நாட்டிற்கான இயக்குநர் நஜய்பென் ஹாசீன் தெரிவித்துள்ளார். (நி-8)

# உச்சத்தைத் தொடும்
# மஸ்க்-ட்ரம்ப் முறுகல்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் எலோன் மஸ்க் இடையிலான பதற்றங்கள் உச்சத்தை எட்டியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜேர்மன் சான்சலருடன் நடந்த சந்திப்பில், மஸ்க், கையெழுத்து சட்டத்தை விமர்சித்திருந்தமை குறித்து தான் ஆச்சரியம் மற்றும் ஏமாற்றம் அடைந்ததாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மேலும், "ட்ரூத்" எனப்படும் ட்ரம்பின் சமூக வலைத்தளத்தில், மஸ்க் மனநிலை சரி இல்லாதவராக மாறி வருவதாக அவர் பதிவிட்டுள்ளார்.

'Doge' அமைப்பு மூலம் அதிகப் படியான செலவினங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் செயற்பட்டுக்கொண்டிருந்த எலோன் மஸ்க், கடந்த மாதம் தனது அரச பதவியில் இருந்து விலகினார்.

இதனையடுத்து, ட்ரம்ப் மற்றும் எலோன் மஸ்க் இடையிலான மோதல் தீவிரத்தன்மையை அடைந்துள்ளது. இருவரும் ஒருவரை ஒருவர் சமூக வலைத் தளங்களில் விமர்சித்து வருகின்றனர்.

உதாரணமாக, ட்ரம்பின் வரிக்கொள்கை இரண்டாம் பாதியில் மந்த நிலையை ஏற்படுத்தும் என மஸ்க் X தளத்தில் பதிவிட்டுள்ளார்.


இதேவேளை, ட்ரம்பின் பிரசாரங்களுக்காக மஸ்க் 290 மில்லியன் டொலர்களை செலவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

விரோத ஆதாரமற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்க்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்

சர்வதேச குற்றவியல்நீதிமன்றம் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

நடந்த ஆண்டு நீதிமன்றத்தின் முன் விசாரணை மற்றும் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த நீதிபதிகள் ரெய்ன் அடிலெய்ட் சோஃபி அலபினி கன்சோ மற்றும் பெட்டி ஹோஹ்லர் ஆகியோர் நெதன்யாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் ஆகியோரை குறிவைத்து பிடியாணைகளை பிறப்பிப்பதற்கு அனுமதி வழங்கினார்கள் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சர்வதேச நீதித்துறை நிறுவனத்தின் சுதந்திரத்தை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் தெளிவான முயற்சி என தெரிவித்துள்ள ஐசிசி பொறுப்புக்கூறலிற்காக பாடுபடுபவர்களை இலக்கு வைப்பது மோதலில் சிக்குண்டுள்ள மக்களிற்கு எந்தவகையிலும் உதவாது என தெரிவித்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நடுக்குடா கடற்கரையில் ஒரு தொகுதி பீடி இலைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் நடுக்குடா கடற்கரை பகுதியில் வைத்து ஒரு தொகுதி பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படை புலனாய்வுப் பிரிவு வழங்கிய இரகசிய தகவலுக்கு அமைவாக கடற்படை மற்றும் மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது நேற்று வெள்ளிக்கிழமை காலை நடுக்குடா கடற்கரைப் பகுதியில் வைத்து ஒரு தொகுதி பீடி இலை மூட்டைகளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதன் போது சந்தேகத்திற்கிடமான இரண்டு படகுகளில் காணப்பட்ட பொதிகளை சோதனை செய்த போது குறித்த படகுகளில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் மீட்கப்பட்டன.

இரு படகுகளில் இருந் தும் 40 மூடைகளில் பொதி செய்யப்பட்ட சுமார் 1250 கிலோ பீடி இலைகள் இவ்வாறு மீட்கப்பட்டது.

மேலும் குறித்த படகுடன் கல்பிட்டி பகுதியைச் சேர்ந்த 4 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட பீடி இலை மூடைகள் கடற்படையின் உதவியுடன்,மன்னார் மது வரி நிலையத்திற்கு கொண்டு செல லப்பட்டது. மேலும் மீட்கப்பட்ட இரண்டு படகுகளின் வெளி இணைப்பு இயந்தி ரங்கள் மற்றும் ஏனைய பொருட்களும் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர் களையும் கடற்படையினர் மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகளிடம் ஒப்ப டைத்துள்ளனர்.மேலதிக விசாரணை களை மன்னார் மதுவரி நிலைய அதிகா ரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.(8-285)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்: 6"
தகைமை/தொழில்:
BSc.PHD (Newzealand)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15589

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:மகம்
8இல் செவ்
கி-பா-62
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L.Sales Rep(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15590

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:உத்திரம்
கி-பா-12 3/4
உயரம்:5'8"
தகைமை/தொழில்
BCom,Business(own)
எதிர்பார்ப்பு: PRஉள்ளவர்(France,Swiss)
தொ.இ: B/15592

பிறப்பு: 1975- இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
உயரம்:6"
தகைமை/தொழில்: BSc,MSc,Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15593

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா- 17 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Civil, TO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15594

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: சதயம்
சூரிசெவ் 10இல்
கி.பா:18
உயரம்:5'2"
தகைமை/தொழில்: Bsc,Software Engineer
எதிர்பார்ப்பு:பட்டதாரி உத்தியோகம்
தொ.இ: G/11971

பிறப்பு-1984-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: உயர்தரம் டிப்ளோமா
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14572

பிறப்பு-1991 -இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா- 23
சூரி செவ் 12இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBA, MBA Management Assistant.
எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை (Gov/Pvt)
தொ.இ: G/14352

பிறப்பு -1991- இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: -29
உயரம்:5'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/14425

பிறப்பு -1993- இந்து
நட்சத்திரம்:அனுஷம்
கி.பா:28
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:
College,Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்/ வெளிநாடு
தொ.இ: G/14440

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 390



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புண்ணிய தீர்த்தம்!

ஹடயோகி ஒருத்தன் ஒரு மகானிடம் போனான். "ஆகாயத்திலே பறக்கின்ற சக்தி எனக்கு இருக்கிறது!" என்றான். அவர் பார்த்தார் "குருவி - கழுகு கூடத்தான் ஆகாயத்திலே பறக்கிறது!" என்றார். என்னை பூமியிலே புதைத்து வைத்தால்கூட நீண்ட காலம் அப்படியே இருப்பேன் என்றான் அவன். புழு பூச்சிகள் கூட பூமிக்கு அடியிலே நீண்ட காலம் இருக்க முடியுமே" என்றார்அவர், எனக்கு "ஜலஸ்தம்பம்" தெரியும் என்னறான் அவன். "மீன் கூடத்தான் தண்ணிரிலே இருக்கின்றது" என்றார் அவர்

அதற்கு மேலே அவனால் பேச முடியவில்லை.

நமக்கு சித்து வேலைகள் எல்லாம் தெரியும் என்று பெருமையாகச் சொன்னால் அதை இவர் இப்படி அநியாயமாக தூக்கிப் போட்டு விட்டாரே என்று நினைத்தான். இப்போது அந்த மகான் சொன்னார்.

இதோ பார் அப்பா! பறவைகள் மாதிரியும் புழுக்கள் மாதிரியும் மீன்கள் மாதிரியும் தாழ்ந்த ஜந்துக்கள் போல நடந்துகொள்வதால் என்ன பிரயோஜனம்? மனிதர்களை மாதிரி நடக்கக் கற்றுக்கொள்ளுங்கள் கடவுள் மாதிரி ஆக கற்றுக்கொள், கர்வத்தையும் கோபத்தையும் அடக்குங்கள், கருணையையும் நல்ல குணங்களையும் விருத்தி செய் அப்படி என்று புத்தி சொன்னார். மனம் தன்னுடைய வாசனைகள் எல்லாத்தையும் இழந்து அதன் உண்மையான உருவத்தை அடைவது தான் எல்லா சித்துகளையும் விட மேலானது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும்.

தீர்த்தங்கள் எல்லாம் போய் நீராடுவது எதற்காக? மனம் சுத்தமாகுவதற்குத்தான். உடல் சுத்தமாக வேண்டும் என்றால் அதை வீட்டிலேயே சவர்காரம் போட்டு குளித்துவிடலாமே! அதற்கு எதற்கு செலவு செய்து அவ்வளவு தூரம் போக வேண்டும்? வினோபாஜி ஒரு கதை சொன்னார். அது என்ன தெரியுமா? ஒரு பெரிய மனிதன் மிகவும் வசதியான நபர் செல்வந்தன். அவன் யாத்திரை செய்ய புறப்பட்டான். தன்னோடு வேலைக்காரனையும் கூட அழைத்துக்கொண்டு போனான். செல்லும் இடங்களிலே சமையல் செய்து போட வேண்டும் என்பதற்காக.

ஒரு வருடம் முழுவதும் எங்கெங்கேயோ சுத்தினார்கள். புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் போனார்கள் புனிதமான தீர்த்தங்கள்லேயெல்லாம் நீராடினார்கள். அந்த பெரிய மனிதனை உக்கார வைத்து சாப்பாடு போட்டான். அவர் சாப்பிட ஆரம்பித்தார்.சாப்பிட முடியவில்லை.

சாப்பாட்டிலே ஒரு மாதிரியான மோசமான வாசனை. அவரால் அந்த இடத்திலே உட்காரவே முடியவில்லை. அவ்வளவு மோசம். "என்னடா சமையல் இது?"என்று வேகமாக சத்தம் போட்டார். அவர் பக்குவமாக வந்து இவர் முன்னால் நின்றான். புனிதமான காய்கறிகளை உங்களுக்கு இன்று சமைத்துப் போட்டிருக்கிறேன் என்றான். இவருக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன சொல்கின்றாய்" என்றார். அவன் மெதுவாக விவரம் சொல்ல ஆரம்பித்தான்.

அது வந்து எஜமான் நாம் இங்கேயிருந்து புறப்படும் போது நம்முடன் கொஞ்சம் உருளைக்கிழங்கையும் எடுத்துக் கொண்டு வந்தேன். நாம் நீராடின போதெல்லாம் நான் இந்த உருளைக்கிழங்குகளை புண்ணிய தீர்த்தங்களிலே குளிப்பாட்டினேன்.

கங்கை,, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளிலே நீராடிய உருளைக்கிழங்கைத்தான் இன்றைக்கு உங்களுக்கு சமைத்துப் கொடுத்தேன் என்றான். "என்ன இப்படி செய்து விட்டாயே?"என்றார்.

இது அசுத்தமானது இல்லை மிகவும் பரிசுத்தமானது எல்லா நதிகளிலும் நீராடிய இது அசுத்தம் என்றால் எல்லா தீர்த்தங்களிலேயும் நீராடிய நீங்களும் அசுத்தமானவரா? என்று கேட்டான். அந்த பெரிய மனிதனுக்கு புத்தி வேலை செய்ய ஆரம்பித்தது.

தீர்த்தங்களிலே நீராடுவதாலே மட்டும் யாரும் புனிதமடைய முடியாது என்ற உண்மையை அந்த வேலைக்காரன் மூலமாக புரிந்து கொண்டார். உடல் சுத்தமாகின்ற அதே நேரத்திலே மனசுதும் சுத்தமாக வேண்டும்.

அப்போதுதான் மனிதனாக வாழமுடியும். தெய்வமாக உயர முடியும்.

அதை விட்டுவிட்டு புண்ணிய யாத்திரை செய்ய போகிறோம் என்று வேடம் போட்டுக்கொண்டிருப்பதாலே ஒரு பிரயோஜனம் இல்லை.

ஒரு புண்ணிய ஷேத்திரம். அங்கே ஒரு தீர்த்தம். அதிலே ஒருத்தன் ஒரு நாள் முழுவது மூழ்கி எழுந்திரித்தான். ரொம்ப பக்தி போலஇருக்கு. அதற்குப்பிறகு கரையேறி வந்தான். கரையிலே உட்கார்ந்திருந்த ஒரு மகானிடம் வந்து நின்றான் ஈரத்துணியோடு.

"சுவாமி நான் கடைத் தேருவதற்கு வழி சொல்லுங்கள்" என்றான் மிகவும் பணிவாக. அதுதான் புண்ணியத் தீர்த்தத்திலே நீராடி விட்டாயே. பாவம் எல்லாம் தொலைந்து போய்விட்டது என்றார்.

"தொலைந்தது பாவம் இல்லை சாமி. என் மனைவியுடைய தங்க சங்கிலி. நேர்த்திக்கு இங்கே வந்து நீராடிய போது தொலைந்து போய் விட்டது. அதை கண்டு பிடித்து வந்தால்தான் சாப்பாடு என்று சொல்லி விட்டாள். அதுதான் இன்றைக்குக் காலையிலேயிருந்து அதே இடத்திலே முழுகி முழுகி எழுந்திருக்கிறேன். அகப்படுகி ற வழியைக் காணவில்லை என்றான் அவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெல்அறுவடை ஆரம்பம்

## உரிய விளைச்சலை பெற முடியவில்லை!



### விவசாயிகள் கவலை

(தருமபுரம்)

**2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உரிய விளைச்சலை பெறமுடியாத நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரமந்தனாறு நீர்ப்பாசன குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை 175 ஏக்கர் நெற்ப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது அறுவடை நடைபெற்று வருகின்றது.

இம்முறையும் போதிய அளவிலான விளைச்சலை பெற முடியாத நிலையில் உள்ளதாகவும் பல தடவைகள் கிருமி நாசினி விசிறப்பட்டிருந்த போதிலும் உரிய விளைச்சலை பெற முடியாத நிலைதோன்றியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.


அரசாங்கத்தினால் உரிய காலத்தில் நெல்லுக்கான நிர்ணய விலை விவ சாயிகளுக்கு ஏற்ற வகையில் நிர்ணயிக்கப்படுவதில்லை இதன் காரணமாக விவசாயிகள் அறுவடை செய்த நெல்லினை விற்பனை செய்ய முடியாத நிலையில் இடைத்தரகர்களுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உரிய நேரத்தில் நெல்லுக்கான விலையை நிர்ணயிக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தொடர்ச்சியாக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தனர்.

(8-316)



# மன்னாரில் உணவகம் ஒன்றுக்கு 83 ஆயிரம் ரூபா அபராதம்



(மன்னார்)


மன்னாரில் உள்ள பிரபல உணவகம் ஒன்றின் முகாமையாளர் மற்றும் ஊழியர் ஒருவருக்கு ஐந்து வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை மற்றும் குறித்த இருவரும் பணியாற்றிய உணவகத்துக்கு 83000 ரூபா தண்டப்பணமும் கடந்த 5 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது

மன்னார் நகர சபை பொது சுகாதர வைத்திய பரிசோதகரினால் மன்னார் மாவட்டத்தில் சாவற்கட்டு பகுதியில் அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது தலையுறை பயன்படுத்தாமை, மருத்துவ அனுமதி பெறாமை, உணவுகளை ஒழுங்கற்ற முறையில் களஞ்சியப்படுத்தியமை, கழிவு நீர் தொட்டியை உரிய முறையில் பேணாமை, சுத்தம் பேணப்படாமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சம்பவத்தில் சந்தேக நபர்களாக அடையாளப்படுத்தப்பட்ட உணவகத்தின் முகாமையாளர் மற்றும் ஊழியருக்கு ஐந்து வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனையும் அதே நேரம் உணவகத்துக்கு 83000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற 200000 ரூபா பெறுமதியான பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டு மன்னார் நகர சபை பொது சுகாதார வைத்திய பரிசோதகர் முன்னிலையில் அழிக்கப்பட்டுள்ளன (8-285)

## தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுர பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக D.m.S.J திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அனுராதபுரம் மாவட்டத்தின் கலேமிதுனுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி தற்போது தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் நான்காவது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (8-316)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம்,பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெற்று எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு அம்பாள் தீர்த்தக் குளத்தில் தீர்த்தோற்சவமும் அன்று இரவு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-3)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு ஆளுநர் விஜயம்



நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலுள்ள பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் வடக்கு மாகாண ஆளுநரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் தேவைகள் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தை இயக்குமாறு கோரியிருந்தனர். இதன் பின்னர் பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்துள்ள செயற்கை கருத்தரித்தல் நிலையத்தின் (ஐ.வி.எவ்.) செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலும் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும், ஆளுநரை மருத்துவமனையை வந்து நேரில் பார்வையிடுமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்ற ஆளுநர், புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ள பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தை பார்வையிட்டார். அங்கு கிளினிக் செயற்பாடுகள் நடைபெறுவதை பார்வையிட்டதுடன், பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள ஏனைய சிகிச்சை நிலையங்களையும் நேரடியாகப் பார்வையிட்டார்.

இதற்கான ஆளணி இன்னமும் அனுமதிக்கப்படாத நிலையில் அதனைப் பெற்று விரைவாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 793





"ஒவ்வொருவனும் பிறக்கும் போதே 'இன்னாருக்கு இன்னபடி' என்று பிரம்மதேவன் தலையில் எழுதி விடுவதாகச் சொல்கிறார்களே, அதை நீர் நம்புகிறீரா, இல்லையா?"

"இல்லை! எனக்கு விதியில் நம்பிக்கையில்லை. விதியை முழுதும் நம்புவதாயிருந்தால், பரந்தாமனிடம் பக்தி செய்து உய்யலாம் என்பதற்குப் பொருள் இல்லாமற் போய்விடும் அல்லவா? ஆழ்வார்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்"

"ஆழ்வார்கள் எதையாவது சொல்லியிருக்கட்டும். எனக்கு விதியில் பூரண நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. விதியின்படியே தான் எல்லாம் நடக்கும் என்று கருதுகிறேன். இல்லாமற் போனால் இன்றைக்கு நான் தப்பித்துக் கொண்டு வந்திருக்க முடியாது."

"அப்பனே! விதியினால் நீ தப்பித்து வரவில்லை மதியின் உதவியினால் தப்பித்து வந்தாய்."

"இல்லவே இல்லை என் மதி என்னை ஆழம் தெரியாத அபாயத்தில் கொண்டு போய்ச் சேர்ந்தது விதி என்னை அதிலிருந்து கரையேற்றியது!"

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே காட்டைக் கடந்து வந்து விட்டார்கள். கடம்பூர் அரண்மனையின் முன் வாசல் அங்கிருந்து தெரிந்தது. அங்கு ஒரே அல்லோலகல்லோலமாக இருந்ததும் தெரிந்தது. பழுவேட்டரையரின் யானை, குதிரை, பரிவாரங்கள் வெளியிலிருந்து வாசலை நெருங்கி வந்து கொண்டிருந்தன. அமோகமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அரண்மனை வாசலில் சம்புவரையரும் அவருடைய பரிவாரங்களும் வரவேற்பதற்குக் காத்திருந்தார்கள். நூற்றுக்கணக்கான தீவர்த்திகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. பேரிகைகள், முரசுகள், கொம்புகள், தாரைகள், தப்பட்டைகள் ஒன்று சேர்ந்து முழங்கின.

ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனுடைய கையைப் பிடித்து இழுத்து, "வா! போகலாம் யாராவது நம்மைப் பார்த்து விடப் போகிறார்கள்!" என்றான்.

"இந்தப் பக்கம் ஒருவரும் பார்க்கமாட்டார்கள் பார்த்தாலும் என்னுடைய விதி என்னைக் காப்பாற்றும். பெரிய பழுவேட்டரையர் யானை மீது வந்து இறங்கும் காட்சியைப் பார்க்க வேண்டாமா?"

"அது மட்டுந்தானா?"

"பழுவூர் ராணி நந்தினி அவருடன் யானை மீதில் வந்து இறங்குகிறாளா, அல்லது மூடுபல்லக்கில் வருகிறாளா என்று பார்க்கவும் விரும்புகிறேன்"

"தம்பி! விதி எப்போதும் உனக்கு அனுகூலமாக இருக்கும் என்று எண்ணாதே. ஒரு மாயமோகினியின் உருவத்தில் வந்து உன்னைக் குடை கவிழ்த்தாலும் கவிழ்த்துவிடும்."

"அப்படியெல்லாம் மயங்கி விடுகிறவன் நான் அல்ல வைஷ்ணவரே! அதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்!"

கம்பீரமான யானை வந்து அரண்மனை வாசலில் நின்றது. அதன் மேலிருந்து பெரிய பழுவேட்டரையர் இறங்கினார். அவரைத் தொடர்ந்து பழுவூர் இளையராணியும் இறங்கினாள். "ஓ! இந்தத் தடவை இளையராணி மூடுபல்லக்கில் வரவில்லை. பகிரங்கமாகவே அழைத்து வந்திருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிறு துளி



அந்த பெண்ணும், பையனும் யோசித்து நின்றனர். இது வரை அவர்களுக்கு நிறைய பேர் சில்லறை காசுகளை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதை பிச்சையாகத் தான் நினைத்து கொடுத்திருக்கிறார்கள் இவர் மட்டும் காசை கொடுத்து உன் வாழ்க்கையை மாற்றிவிடும் என்று சொல்லி செல்கிறாரே.

யோசனையிலேயே அன்று நாள் முழுவது இருந்தனர். மறு நாள் அந்த பையன் ஒரு முடிவு செய்து அந்த பழக்கடைக்கு சென்று எலுமிச்சம்பழம் ஒரு ரூபாய்க்கு எவ்வளவு கிடைக்கும் என்று கேட்டான்.

அவர் ஐம்பது சதம் வீதம் இரண்டு கிடைக்கும் என்றார். ஒரு ரூபாய்க்கு இரண்டு பழம் வாங்கி வந்தான். அடுத்து இவர்கள் வைத்திருந்த குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் பிடித்து வந்தான். பின் இவர்கள் வைத்திருந்த உப்பு கொஞ்சம் எடுத்து தண்ணீரில் கலக்கி அதற்குள் இரண்டு எலுமிச்சம் பழங்களை பிழிந்தான்.

அந்த குடத்தை வெளியில் கொண்டு வந்து வைத்து, ஒரு தாளில் "தாகம் எடுப்பவர்கள் குடிக்கலாம்" எழுதி அந்த குடத்தில் ஒட்டி வைத்து ஒரு அட்டையும் மூடி வைத்து அதன் மேல் அந்த நசுங்கிய அலுமினிய குவளையும் வைத்தான்.

அந்த பகுதியில் கூலி வேலை செய்பவர்களும் நிறைய இருந்தனர். அவர்களுக்கு அந்த ஜூஸ் கடை என்பது எட்டாக் கனி தான். இந்த குடத்தை பார்த்தவுடன் தன் கையில் வைத்திருந்த சில்லறை காசுகளை போட்டு விட்டு குடித்து விட்டு சென்றனர். மதியம் மேல் அந்த சிறுவன் குடத்தை வந்து பார்த்த பொழுது அதில் சில்லறை காசுகள் இருந்தன.

எடுத்து எண்ணி பார்க்க மூன்று ரூபாய்க்கு மேல் இருந்தது. மீண்டும் பழக்கடைக்கு வந்தவன் எலுமிச்சம்பழங்களை வாங்கி பிழிந்து குடத்தில் தண்ணீர் பிடித்து உப்பை போட்டு கலக்கி வைத்தான்.

மாலை அந்த குடத்திருகே மேலும் சில்லறை காசுகள் கிடந்தன. எண்ணி பார்க்க கிட்டத்தட்ட ஐந்து ரூபாய்க்கு மேல் இருந்தது.

மறு நாள் பழக்கடைக்கு சென்றான். பழக்கடைக்காரர், நேற்று இவன் செய்ததை பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தாப்பா நேற்று நிறைய கூலி ஆளுங்க உன் குடத்துல வச்சிருக்கற தண்ணிய குடிக்கறதை பார்த்தேன்.

நமக்குள்ள சின்ன வியாபாரம் பண்ணிக்கலாம். நான் கொஞ்சம் சாமான் தாரேன், நீ எனக்கு அந்த பொருளுக்கான வாடகையை கொடுத்து விடணும் சரியா?அவரை பொறுத்தவரை வியாபாரம் அது போதும். வியாபாரம் எங்கு ஆனால் என்ன?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி தவறியவனை வழியில் கொண்டு சேர்த்தல் தர்மமாகும் - முகம்மது நபி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன் வில்லை முறித்து எதிர்ப்பைக் காட்டிய விதுரன்

வில்லுக்கு விஜயன் என்பது பின்னாளில் பெற்ற பெயர். உண்மையில் வில்லுக்கு விதுரன் என்பதே சரியானது.

இதை நாம் கூறும்போது வில்லுக்கு விதுரன் என்பது எப்படி வழக்கொழிந்து போனதென நீங்கள் கேட்கலாம்.

ஆம், கௌரவர் சபையில் திரௌபதி மான பங்கப்படுத்தப்படுகிறாள். பாண்டவர்களும் வீஷ்மர், துரோணர் உள்ளிட்டோரும் இருக்கின்ற சபையில் துரியோதனன் செய்த அதர்மத்தை எதிர்த்து எவரும் குரல் கொடுக்கவில்லை. பிதாமகர் என்று போற்றப்பட்ட வீஷ்மர் கூட மௌனித்திருந்தார்.

இங்குதான் வீஷ்மர், துரோணர் ஆகியோரைவிட விதுரன் உயர்ந்து நிற்கிறான்.

துரியோதனா! நீ அழிவைத் தேடுகிறாய். பாண்டவர்கள் மீது நீ கொண்டது பொறாமை. இது நன்றன்று என தர்மத்தைப் போதிக்கின்றான்.

எனினும் அதர்மமே வடிவினனான துரியோதனனுக்கு விதுரனின் அறிவுரை கோபத்தை ஏற்படுத்த, அவன் விதுரனை மிகவும் தரம் தாழ்த்திப் பேசுகின்றான்.

இங்குதான் விதுரன் குருசேத்திரப் போரில் வில்லெடுக்க மாட்டேன் எனச் சபதம் செய்து அச்சபையில் வைத்து தன் வில்லை முறிக்கிறான்.

இதனாலேயே வில்லுக்கு விதுரன் என்ற சொற்பதம் விலகி வில்லுக்கு விஜயன் என்பதாயிற்று.

இங்கு அதர்மத்தைக் கண்டும் மௌனமாக இருந்த வீஷ்மரே குருசேத்திரப்போரில் முதற் பலியானார்.

ஆம், அனைத்து அறத்தையும் நன்குணர்ந்தவர் வீஷ்மர். எனினும் திரௌபதியின் துகிலை துச்சாதனன் களையும்போது, வீஷ்மர் பேசாதிருந்தாரே அதுதான் அவர் விட்ட மகா தவறு. அதனாலேயே அவர் முதலில் களப் பலியாகினார்.

ஆக, இப்போது தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமை இல்லை என்றாயிற்று.

இங்கு நாம் கூறுகின்ற அரசியல் தலைமை என்பது நேர்மையான – விசுவாசமான தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என திரிகரண சுத்தியோடு செயலாற்ற வல்ல தமிழ் அரசியல் தலைமையைக் குறிப்பதாகும்.

அத்தகைய தலைமை இல்லாமல் போன பின்பு, நம் தமிழ்ச் சமூகம் வீஷ்மர் போல அமைதி காப்பதுதான் மிகப்பெரும் அபத்தம்.

உண்மை. கற்றறிந்த தமிழ்ச் சமூகம் எம் அரசியலில் நடக்கின்ற திருகுதாளங்களைக் கண்டு மௌனமாக இருப்பது ஏன்? சிவில் சமூகம் எங்கே? பொது அமைப்புகள் எங்கே? பல்லைக்கழகப் புத்திஜீவிகளும் மாணவர்களும் எங்கே? நீங்கள் மௌனமாக இருந்தால் இழப்புகளைச் சந்தித்த எம் தமிழ் மக்கள் என்ன செய்ய முடியும்.

ஆக, வீஷ்மர் போல மௌனம் காக்காமல் விதுரன் போல இருங்கள். அறிக்கைகள் மூலம் உங்கள் கருத்தை முன்வையுங்கள். தலைமையற்ற எம் தமிழ் இனத்துக்கு புத்திஜீவிகளே கொழுகொம்பாக இருக்க வேண்டும். இந்த உண்மையை தயவுசெய்து மறந்து விடாதீர்கள்.

## சர்ச்சைக்குரிய கொள்கலன்களை விடுவிக்கக்கோரி நான் ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை

### தன் மீதான குற்றச்சாட்டுகளை அடியோடு மறுக்கிறார் பிமல்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொள்கலன்களை விடுவிக்குமாறு நாமோ அரசாங்கமோ ஒருபோதும் சுங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை எனச் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (06) நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

துறைமுகங்கள் மற்றும் சுங்கத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். சுங்கத்தில் இருந்து கொள்கலன்களை விடுவிப்பதற்கு நான் மட்டுமல்ல எமது அரசாங்கத்தில் எவரும் சுங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை.

323 கொள்கலன்கள் விடுவிப்பு தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. இந்த விவகாரத்தில் என்மீதும் ஆதாரமின்றி குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் உண்மை வெளிவரும் என்றார். (ம-7)

## இலங்கை - இந்திய இரு நாட்டுப் பாதுகாப்பு தொடர்பில் இருதரப்புக் கலந்துரையாடல்

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நேற்றுக் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தியப் பாதுகாப்பு செயலாளர் ராஜேஷ் குமார் சிங், இலங்கையின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர மற்றும் பாதுகாப்பு செயலாளர் சம்பத் துய்யகொந்தா ஆகியோருக்கு இடையிலான குறித்த சந்திப்பானது பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில்,

இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராணுவ பரிமாற்றங்கள், கூட்டுப் பயிற்சி வாய்ப்புகள், திறன் மேம்பாடு, அனர்த்த முகாமைத்துவ ஒத்துழைப்பு மற்றும் மனிதாபிமான உதவி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையுடன் நெருக்கமான மற்றும் நட்புறவைப் பேணுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இந்திய பாதுகாப்புச் செயலாளர் இந்த சந்திப்பின் போது மீண்டும் வலியுறுத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்குப் பங்களிக்கும் வகையிலும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்குமான உறுதிப்பாட்டையும் இந்தியப் பாதுகாப்புச் செயலாளர் இதன்போது வெளிப்படுத்தியுள்ளார்.

அதேநேரம் இரு தரப்பினரும் வழக்கமான உயர் மட்ட ஈடுபாடுகளைத் தொடரவும் குறிப்பாக கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டில் ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை ஆராயவும் இணக்கம் தெரிவித்ததாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## பாடசாலை வான் விபத்து மூவர் வைத்தியசாலையில்

(நுவரெலியா)

நுவரெலியா - உடப்புசல்லாவ பிரதான வீதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வேன் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, வீதியோரத்தில் இருந்த மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்

இந்த விபத்து நேற்று (06) பிற்பகல் நுவரெலியா, உடப்புசல்லாவ பிரதான வீதியிலுள்ள இராகலை புரூக்சைட் பகுதியில் சம்பவித்துள்ளது. விபத்தில் காயமடைந்தோர் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நூல் வெளியீடு

தமிழ்ப் பற்றாளர் வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசாவின் வட ஈழ ஆதிகாவியம் "கோவலனார் கதை" நூல் வெளியீடானது இன்று (07) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## மணிவிழா

உடுவில்இந்து இளைஞர் மன்றத்தின் தலைவரும் ஓய்வுநிலைப் பிரதேச சபைச் செயலாளருமாகிய தி.தியாகச்சந்திரன் அவர்களின் மணிவிழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இந்து இளைஞர் மன்ற உடுவில் மேற்கு முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறும். (ந)

### தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர்

## மாவையை படுகொலை செய்ய முயன்ற டக்ளஸ்

### பாராளுமன்றத்தில் சிறீதரன் ஆதங்கம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவைக் கோரியுள்ள நிலையில்,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இயங்கு தளத்தையும் மக்கள் அபிமானத்தையும் சிதையாமற்காத்த பெருந்தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களைப்படுகொலை செய்ய முயன்ற ஒட்டுக் குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.


நேற்றையதினம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில், தமிழரசின் மேனாள்தலைவர் மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவையொட்டி கொண்டுவரப்பட்ட அனுதாபப் பிரேரணை மீது உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஊர்காவற்றுறை மக்களைச் சந்திப்பதற்காகச் சென்ற மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற மேனாள் உறுப்பினர் கனகலிங்கம் சிவாஜிலிங்கம், மேனாள் கிராம அலுவலர் சிவராசா உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது, தமிழினப் படுகொலைகளைப் புரிந்த இலங்கை அரசின் பங்காளியான டக்ளஸ் தேவானந்தாவும் அவரது ஆயுதக் குழுவும் 2001.11.28 ஆம் திகதி நாரந்தனை - தம்பாட்டிப்பகுதியில் வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஏரம்பு பேரம்பலம், யோகசிங்கம் கமல்ஸ் ரோங் ஆகிய இருவரும் அந்த இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டதுடன் 28 பேர் படுகாயமடைந்தனர். மாவை சேனாதிராஜா அவர்கள்கொட்டன்பொல்லுகளாலும் துப்பாக்கிகளாலும் வாள்களாலும் சுட்டும் வெட்டியும் அடித்தும் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு நினைவிழக்குமளவு காயமுற்றிருந்த கறைபடிந்த சம்பவத்தையும் மீள நினைவூட்டி அவரது நினைவுகளைப் பதிவு செய்கிறேன் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில்
# 16 வருடங்களின் பின் இலங்கை சாதனை




தாய்லாந்தின் பாங்கொக் அல்பைன் கால்பந்தாட்டப் பயிற்சியக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (05) பிற்பகல் நடைபெற்ற சர்வதேச சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் புருணையை 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி கொண்டது.

சர்வதேச கால்பந்தாட்டத்தில் புருணையை இலங்கை வெற்றி கொண்டது கடந்த 16 வருடங்களில் இதுவே முதல் தடவையாகும்.

புருணைக்கு எதிராக கடைசியாக 2009ஆம் ஆண்டில் நடைபெற்ற சிநேகபூர்வ போட்டியில் இலங்கை 5 - 1 என்ற கோல்கள் வித்தி யாசத்தில் வெற்றிகொண்டிருந்தது.

இரண்டு அணிகளும் சம அளவில் மோதிக்கொண்ட இப் போட்டியின் முதலாவது பகுதியில் கோல் எதுவும் போடப்படவில்லை.

இடைவேளைக்குப் பின்னர் 56 ஆவது நிமிடத்தில் டிலொன் டி சில்வா இடதுபுறத்தில் இருந்து உயர்வாகப் பரிமாறிய பந்தை வலதுகாலால் தடுத்து நிறுத்திய லியோன் பேரேரா இடதுகாலால் பந்தை கோலினுள் புகுத்தினார்.

அதுவே இலங்கையின் வெற்றி கோலாக அமைந்தது.

அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ள சைனீஸ் தாய்ப்பே அணிக்கு எதிரான ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டிக்கு முன்பதாக கிடைத்த வெற்றி இந்த வெற்றி இலங்கைக்கு பெருஉற்சாகத்தைக் கொடுத்துள்ளது. (நி-3)

## வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி
# சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது புனித தெரேசாள் மகளிர் கல்லூரி




யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

பரபரப்பான ஆட்டத்தில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி 18:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (நி-3-90)

## நோர்வே செஸ் போட்டி
# உலக சம்பியனை வீழ்த்தினார் இந்திய கிராண்ட் மாஸ்டர் வைஷாலி



ஸ்டாவஞ்சரில் நடந்து வரும் நோர்வே பெண்கள் செஸ் போட்டியில், ஆர்மகெடோன் சுற்றில், இந்திய கிராண்ட்மாஸ்டர் வைஷாலி ரமேஷ் பாபு பெண்கள் உலக சம்பியன் ஜூ வென்ஜூனை தோற்கடித்து சாதனை படைத்துள்ளார்.

உலக சம்பியனான வென் ஜூனை வைஷாலி தோற்கடிப்பது இதுவே முதல்முறையாகும். இந்த வெற்றியின் மூலம் அவருக்கு ஒரு புள்ளி கிடைத்தது. இன்னும் 2 சுற்றுகள் எஞ்சியுள்ள நிலையில், 6 வீராங்கனைகள் கொண்ட பட்டியலில் வைஷாலி 5வது இடத்தில் உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே நோர்வே செஸ் போட்டியில் வைஷாலியின் சகோதரர் பிரக்யானந்தா, உலக சம்பியனான நோர்வேவின் மேக்னஸ் கார்ல்சனை முதல்முறையாக தோற்கடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-3)

## சாராய...

யோர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிக்கையில், சீனி உற்பத்திச்சாலைகளின் நட்டத்தை போக்கிக்கொள்வதற்காக 475 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் எதனோலை 800 ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.இதனால் பல இடைப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

குறிப்பாக எதனோல் விலையை அந்தளவு அதிகரிக்கும்போது சந்தையில் மதுபானங்களின் விலை அதிகரிக்கப்படும். அவ்வாறு அதிகரிக்கப்படும்போது அதற்கு நிகராக நிச்சயமாக கசிப்பு உற்பத்தியும் அதிகரிக்கப்படும். கசிப்பு உற்பத்தி அதிகரிக்கப்பட்டால், அரசாங்கத்துக்கு கிடைக்கும் சுங்கவரி வருமானம் குறைவடையும். இதனால் எமது வருமான இலக்கை அடைந்துகொள்ள முடியாமல் போகிறது.

அதனால் இந்த ஆபத்தான நிலைமையை புரிந்துகொண்டே எதனோல் விலை அதிகரிப்பு தொடர்பில் தீர்மானிக்க வேண்டும். அதேநேரம் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்போது, நிதி அமைச்சுடன் சம்பந்தப்பட்டு, வருமான இலக்கை அடைந்துகொள்ள இருக்கும் பிரச்சினை தொடர்பில் புரிந்துகொண்டு இந்த விடயத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இது குறித்து பதிலளித்த அமைச்சர் சுனில், எதனோல் ஒரு லீற்றர் 1500 ரூபாவுக்கு இருக்கும்போதும் சாராயம் ஒரு போத்தல் 3500, 4000ஆயிரம் ரூபாவுக்கே விற்பனை செய்யப்பட்டது. தற்போது எதனோல் ஒரு லீற்றர் 475 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்போதும் சாராயப் போத்தலின் விலை குறையவில்லை.

எதனோல் ஒரு லீற்றரில் 3 சாராய போத்தல்கள் உற்பத்தி செய்ய முடியும். அப்படியானால் சாராயம் ஒரு போத்தல் எந்தளவு குறைந்த விலைக்கு விற்பனை செய்ய முடியும் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

அதனால் எதனோல் விலையை 475 ரூபாவில் இருந்து 800 ரூபாவரை அதிகரிப்பதால், சாராயம் உற்பத்தியாளர்களுக்கு எந்தப் பிரச்சினையும் எற்படப் போவதில்லை.

இந்த விடயத்தில் ஒரு பிரச்சினை இருக்கிறது. இதுதொடர்பில் நான் ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை வழங்குவேன். நிதி அமைச்சில் இருப்பவர்களில் சாராய கம்பனிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் ஓரிரு நபர்கள் இருக்கின்றனர்.அவர்களின் பெயர் விபரங்களை ஒருசில தினங்களில் வெளிப்படுத்துவேன் அவர்களே இந்த விடயங்களைத் தடுத்து வருகின்றனர் என்றார். (ம-7)

## கிராமிய...

பதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த ஆண்டு பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் செயற்படுத்தப்படும் வேலைத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்யும் கலந்துரையாடல் நேற்று (06) நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இம்முறை பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்துத் துறையில் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது அதிகாரிகள், ஜனாதிபதியிடம் விளக்கமளித்ததுடன், வேலைத்திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் அவற்றைச் செயற்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ம-7)

## ஒளிவு மறைவு...

என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஈபிடிபியுடன் தமிழரசுக்கட்சி மேற்கொண்ட கலந்துரையாடல் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இணைந்து புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டு சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன் டக்ளஸ் தேவானந்தாவை இரகசியமாகச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிவிட்டு அந்த சந்திப்பு மக்களுக்கு தெரிய வந்தவுடனே கூட்டம் காலவரையின்றி பிற்போடப்பட்டது என கூறி ஒழித்து திரிவதைப்போல் நாங்கள் செயற்படவில்லை. நாங்கள் ஒழிவு மறைவு இல்லாமல் கட்சியின் தீர்மானத்தின் படி சகல் கட்சிகளுடனும் பேசியிருக்கின்றோம் என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டா - மோ.சைக்...

நேற்று வெள்ளிக்கிழமை (06) காலை 9.00 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மாதகல் மேற்கை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான கணபதிப்பிள்ளை உலகேந்திரம் (வயது-56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் இன்னொருவரை மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் ஏற்றிக் கொண்டு சங்கானையில் இருந்து சித்தங்கேணி நோக்கி மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தபோது சங்கானைப் பிள்ளையார் கோவில் வளைவுப் பகுதியில் மேற்படி மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த பட்டா ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவரும் படுகாயமடைந்தனர்.

உடனடியாக சங்கானை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இருவரும் மாற்றப்பட்ட நிலையில் மேற்படி குடும்பஸ்தர் உயிரிழந்ததுடன் மற்றவர் படுகாயமடைந்த நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஈ.பி.டி.பியுடன்...

முன்தினம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க தமக்கு ஆதரவு வழங்குமாறு கோரியிருந்தார்.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், உள்ளூராட்சி மன்றங்களில் கூட்டணி அமைப்பது குறித்து டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடுவது பற்றி கட்சியின் உயர்மட்டக்குழுவில் எவ்விதத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும், ஆகவே இச்சந்திப்புத் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

அதுமாத்திரமன்றி கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்கே கட்சி தீர்மானித்திருந்ததாகவும், அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதெனில், அதுபற்றி கட்சியின் உயர்மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## செம்மணி புதை...

தெரிவித்துள்ளார்.

செம்மணி விவகாரம் தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், செம்மணி புதைகுழியிலிருந்து மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். அதன் பின்னர் உண்மைகள் வெளிவரும்.

இது பாரிய மனிதப் புதைகுழி என்று எம்மால் சொல்ல முடியாது. நீதிமன்றத்தில் இது தொடர்பில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. வழக்கு விசாரணைகளும் இடம்பெறுகின்றன. எனவே நீதிமன்றம்தான் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும்.

புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு அரசு தொடர்ந்து நிதி வழங்கும். இந்தப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற அரசு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்றார். (ம-7)

## மனித புதைகுழி...

செம்மணி - சித்துப்பாத்தி பகுதியை மனித புதைகுழியாக பிரகடனப்படுத்தக்கோரி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விண்ணப்பம் தொடர்பான வழக்கு நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று மதியம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் வழக்குத் தொடர்பான சந்தேகத்துக்குரிய பகுதி தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் மற்றும் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் முதற்கட்ட அவதானிப்புகள், பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த அகழ்வுப்பிரதேசத்தில் 1.6 அடி ஆழத்தில் எச்சங்கள் அடையாளம் காணப்பட்டமை, குவியலான குழப்பகரமான வகையில் மனித உடல்கள் புதைக்கப்பட்டுள்ளமை, குறித்த பிரதேசத்தில் ஆடைகளோ அணிகலன்களோ கண்டெடுக்கப்படாத நிலையில், குறித்த பகுதி சந்தேகத்திற்குரிய இரகசியமான மனித உடல்கள் புதைக்கப்பட்ட இடமாக இருக்கலாம் என்ற அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதிமன்றம் குறித்த பகுதி குற்றவியல் சம்பவம் நடந்த இடம் என்றும் இது தொடர்பான அகழ்வாய்வுப் பணிகள் குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ச்சியாக செய்யப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டது.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரி மேலும் 45 நாட்களுக்கு தொடர வேண்டுமென நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். சட்ட வைத்திய அதிகாரியின் கோரிக்கையை ஏற்ற நீதிமன்றம்அதற்கான கட்டளையை வழங்கியதுடன் தொல்லியல் பேராசிரியர் சோமதேவா தொடர்ந்து பணியாற்றி அகழ்வாய்வில் ஈடுபட வேண்டும் என்றும் முறையான பாதுகாப்பு ஒழுங்குகளை குறித்த பகுதியில் மேற்கொள்ள வேண்டும் என்றும் கட்டளையை மேற்கொண்டது. (ம-7,33)

## மல்லா...

வண்டியில் மேற்படி நபர் சென்று கொண்டிருந்த போது எதிர் திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார்.

இதனை அடுத்து அவர் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (06) காலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இலங்கைத்...

விடுக்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தமிழ்த் தேசியத்திற்கு விரோதமாக செயற்பட்ட தரப்புகளுடன் இணைந்து பதவிகளைப் பெறுவதே நோக்கம் எனில், எங்கள் கூட்டில் வருவதன் ஊடாக தமிழரசுக் கட்சிக்கு தேவைப்படுகின்ற சபைகளை தருவதற்கு நாங்கள் உறுதிப்படுத்த தயாராக உள்ளோம் என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.06.06
சீட்டிழுப்பு இலக்கம் 5852
S 4 7 6 5 1 9
அத சம்பத
S 6 5 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0427
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1882
T 15 41 51 55 T
82929

மெகா பவர்
திகதி 06/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2200
A 12 01 50 51 77

ஜய
2025.06.06
120
V 3 9 4 0
818551
95390
9 26369

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4094
சீட்டிழுப்பு திகதி 06.06.2025
C 30 35 40 53
C

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.06
சீட்டிழுப்பு இலக்கம் 1161
மீனம் 08 31 37 47 மீனம்
31456 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
06.06.2025
வெற்றி வாரம் 560
Q 8 7 3 5 6 8
99625
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,677,780.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2826
சீட்டிழுப்பு திகதி 2025.06.06
தினம் வெள்ளிக்கிழமை
02 07 27 63 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,649,388.00
DLB

சனிதா
திகதி 06.06.2025 வெற்றி வாரம் 4987
03 26 41 68 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,376,005.60
70460
DLB

சசிரி
வெற்றி வாரம் 698
சீட்டிழுப்பு திகதி 06.06.2025
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 35 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4538
சீட்டிழுப்பு திகதி 06.06.2025
தினம் வெள்ளிக்கிழமை
09 15 27 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,516,109.60
176649
DLB

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 26 05 31 47 50
2002
06.06.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,301,447.20
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2652
சீட்டிழுப்பு திகதி 2025.06.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,677,048.00
10 27 72 76 E
375538
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(C-1197)

## A/L 2027 வர்த்தகப் பிரிவு

தமிழ்மொழி மூலம், English Medium
மாவட்ட நிலை 11, 50 மற்றும் 73...
பொருளியல் : M.லிஜிதன்
கணக்கீடு : A.T.சுரேன்
வணிகக்கல்வி : T.S. ரிஷி
தொடர்புகளுக்கு:
077 224 7781
தீபம் உயர் கல்விக் கல்லூரி
(C-3738)

## சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது. 45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
074 076 8566
(4449)

## மாப்பிள்ளை தேவை

1. K.K.S. இந்து, 1993, பூரட்டாதி, MBBS Doctor, Swiss பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (33465)
2. கோண்டாவில், இந்து, 1987, பூராடம், BSc, Australia Citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
3. கொக்குவில், இந்து, 1985, பூரட்டாதி, B.Com, Australia Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (39972)
4. மானிப்பாய், இந்து, 1993, ஆயிலியம், MBBS, LLB, Australia Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (37015)
5. சாவகச்சேரி, இந்து, 1998, அத்தம், MSC, UK பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (51044)
6. வவுனியா - பிறவுண்றோட், இந்து, 1991, திருவோணம், MSC, UK Citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (50117)
7. திருநெல்வேலி, இந்து, 1987, விசாகம், Lawyer, Solicitor, UK Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
8. சாவகச்சேரி, இந்து, 1983, உத்தரட்டாதி, MBA, Dubai பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (21319)
9. மானிப்பாய், இந்து, 1989, உத்தராடம், MBBS, MD, Doctor, USA Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (29980)
10. சாவகச்சேரி, இந்து, 1986, மூலம், Phd, Data Scientist, USA Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.
S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(4458)

## English Classes

தனி மற்றும் குழுவாகவும் அல்லது
Zoom மூலமும் Gr 1 to O/L
and For English beginners
♦Grammar
♦Spoken & School Syllabus
T.P : 077 33 14 608
(1199)

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237
(C-1133)

## வேலைக்கு ஆட்கள் தேவை

இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு அனுபவம் உள்ள பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு :
077 609 6581
(1203)

## மணப்பெண் தேவை

1. கொல்லன்கலட்டி, இந்து, 1991, அனுஷம், MSC, Denmark Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. காரைநகர், இந்து, 1992, சுவாதி, Bachelor, Newzerland + Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3. காரைநகர், இந்து, 1989, உத்தரட்டாதி, BSC(Hons), மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. சுதுமலை, இந்து, 1989, உத்தரம், Senior Software Engineer, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. நல்லூர், இந்து, 1987, அத்தம், BA(Hons), Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. Jaffna - Town, இந்து, 1991, உத்தரம், CIMA, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. கரம்பொன், இந்து, 1992, உத்தராடம், BSC மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. உடுப்பிட்டி, இந்து, 1990, திருவோணம், HNDA, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. சுன்னாகம் - தெல்லிப்பளை, இந்து, 1992, ரேவதி, Civil Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. மட்டுவில், இந்து, 1985, கேட்டை, B.Eng (Hons) Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.
S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(4458)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

எங்களோடு 1992 . 10 . 31



எங்களைவிட்டு 2021 . 05 . 23

### அமரர் திருமதி தர்ஷியா

(முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி!!!
மறந்தால் தானே நினைப்பதற்கு!
எங்கு பார்த்தாலும் உந்தன் முகம்!
கண்கள் மூடினால் உன் குரல்!
எங்கள் குடும்பத்தின் ஒட்டுமொத்த சந்தோஷம்,
எங்களை நீங்கி இன்றோடு நான்கு ஆண்டுகள்!!!
வரும்போது எல்லா சந்தோஷங்களையும் கொண்டு வந்தாய்
போகும் போது அப்படியே எடுத்துச் சென்று விட்டாய்.
பிள்ளைகள் வளர்கின்றார்கள்.
எங்கிருந்தாலும் உன் ஆசீர்வாதம் அவர்களுக்குண்டு.

ஏக்கத்தோடும் கவலைகளோடும்
பிள்ளைகள், அம்மா, அப்பா,
தம்பி, தங்கை,
மைத்துனர், மைத்துனி

விநாயகர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(4461)


## சிவபூமி மனவிருத்திப் பாடசாலை
### (வேலாயுதம் வீதி - சாவகச்சேரி)

## புதிய மாணவர் அனுமதி

மனவிருத்தி குன்றிய சிறார்களுக்காக நவீன முறையிலான கல்வியினை வழங்கும் நோக்கில் சாவகச்சேரியில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். தற்போது புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளப்படவுள்ளது. எனவே தங்கள் பிள்ளைகளின் சுயவிபரம் அடங்கிய விண்ணப்படிவங்களை 30.06.2025 முன்னர் அனுப்பி வைக்கவும்.

(மேலதிக விபரங்களுக்கு)
தபால் முகவரி - தலைமை அலுவலகம் சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.
தொலைபேசி :- 021 222 7938
(காலை 9.00 - 2.00 மணி வரை)
(4463)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 216/= Max 1Kg | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 256/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 415/= | |
| 1Kg திட்டல் பச்சை | - 240/= | |
| 1Kg ஈக்குத்திட்டல் | - 215/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 790/= | |
| 1.5 L பெப்சி | - 345/= | ~~400/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~80/=~~ |
| 400g லக்ஸ்பிறே | - 1030 | ~~1100/=~~ |
| 200g சமபோஷ | - 165/= | ~~185~~ |
| 350g கோழி நூடில்ஸ் | - 120/= | ~~200/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~




1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30
(1202)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org